# உழவுத் தொழில்

உலகில் உள்ள தொழில்கள் அனைத்திலும் உழவுத் தொழிலே சிறந்தது. உலக மக்களுக்கு உணவளிக்கும் தொழில் உழவுத் தொழிலே. நெற்றி வியர்வை நிலத்தில் சிந்தப் பாடுபட்டு உழைக்கும் உழவனை நாம் மறந்து விடமுடியாது. இதனாற்றான் திருவள்ளுவரும்

***சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்***
***உழன்றும் உழவே தலை***

என்றும் உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் என்றும் கூறியிருக்கிறார். பாரதியாரும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று பாடியுள்ளார். மாந்த வாழ்க்கையில் இன்றியமையாதது உணவு, உடை, உறையுள் ஆகும். இவற்றுள் உணவே முதன்மை இடம் வகிக்கிறது. உணவளிப்பதற்கு உழவுத் தொழில் சிறக்க வேண்டும். இத் தொழிலில் ஈடுபடுவோர் உண்மையிலேயே போற்றுதற்குரியவர்கள். அமுதத் தமிழ் தந்த ஔவையும் உழவுத் தொழிலின் உயர்வைப் போற்றி

***ஆற்றங்கரையில் மரமும் அரசு அறிய***
***வீற்றிருந்த வாழ்வும் விழும்அன்றே - ஏற்றம்***
***உழுது உண்டு வாழ்வதற்கு ஒப்பில்லை கண்டீர்***
***பழுது உண்டு வேறோர் பணிக்கு***

என்று சிறப்பாக கூறியிருக்கிறார். அந்த உழவுத் தொழிலுக்கு மழை, வெப்பம், ஒளி போன்றவற்றை தருவதால் கதிரவனுக்கு நன்றி கூறுகிறோம். அதேபோல் உழவுத் தொழில் செய்யும் உழவரை போற்றுவதற்காக உழவர் திருநாள் என்று கூறுகிறோம். உழவுத் தொழில் நடைபெறாவிட்டால் மக்கள் உயிர்வாழ முடியாது. எனவே தான் உழவுத் தொழில் சிறந்து விளங்குகிறது.